சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:14.07.2025

DW1: பாண்டி த/பெ- ஆறுமுகம்

**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) தாவா வழக்கின் வாதி பாண்டியம்மாள் எனது சகோதரி என்றால் சரிதான்.3 ம் பிரதிவாதி எனது சகோதரர், 4, 5 பிரதிவாதிகள் எனது சகோதரிகள். தாவா வழக்கு 4 லக்க சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 மற்றும் 5 இலக்க சொத்துக்கள் தாயார் பூச்சம்மாள் 03.12.1982ம் தேதி கிரையம் பெற்றார் என்றால் 3ம் இலக்க சொத்து மட்டும் எனது தாயார் பெயரில் வாங்கப்பட்டது. 4ம் இலக்க சொத்தான வீடு பூர்வீக சொத்து என்றால் சரியல்ல, எனது தகப்பனார் சுயசம்பாத்திய சொத்தாகும். மேற்படி 4ம் இலக்க சொத்தை எனது தகப்பனார் கிரையம் பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் அரசால் எனது தகப்பனாருக்கு இலவசமாக வழங்கப்பட்ட இடமாகும். தாவா சொத்துக்களை தவிர எனது தகப்பனாருக்கு வேறு சொத்துக்கள் இல்லை.

2) தாவா 1, 2 இலக்க சொத்துக்கள் கூட்டுக்குடும்ப வருமானத்தல் இருந்து எனது தகப்பனார் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல, எனது தகப்பனாரின் சுயசம்பாத்தியத்தில் வாங்கப்பட்டது. எனது தகப்பனார் 04.03.2014ம் தேதி தாவா சொத்துக்களை எனக்கும், 3ம் பிரதிவாதிக்கும் தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளார். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தினை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி தெரியவில்லை. அந்தஅசல் ஆவணத்தை பார்வையிட்டால் தான் அந்த ஆவணத்தின் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரிதான்.

3) எனது தகப்பனாரின் முழு விருப்பதின் பேரில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எங்களுக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றும், எங்கள் தூண்டுதலின் பேரில் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. எனது தாயார் உயிருடன் இருக்கும் வரை சொத்துக்களை பொறுத்து உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். எனது தாயார் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் அவரது வாரிசுகள் அனைவருக்கும் சமமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது தாயாரால் கிரையம் பெறப்பட்ட 3ம் இலக்க சொத்து சேர்த்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 3ம் இலக்க சொதத்து எனது தகப்பனாருக்கு முழுமையாக பாத்தியப்பட்டது இல்லை என்றும், அதை பொறுத்து தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுக்க எனது தகப்பனாருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதற்கான செலவினை எனது தகப்பனார் செய்தார். தானசெட்டில்மெண்ட் எழுதும் நான் எனது தகப்பனாருடன் சென்றிருந்தேன். மேற்படி ஆவணத்தில் ராமர் என்பவர் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார்.

4) தாவா சொத்துக்களுக்கு வருவாய்துறையில் பட்டா எங்கள் பெயரில் உள்ளது. வாதி பாண்டியம்மாள் தாவா சொத்துக்களில் 1/5 பாகம் கோரியுள்ளார் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி மாரீஸ்வரி தாவா சொத்துக்களில் அவருக்குரிய 1/5 பாகத்தினை கோரி எதிர் கோரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நானும் எனது சகோதரரர் பொன்னுபாண்டியும் தாவா சொத்துக்கள் எனது தகப்பனார் மூலம் கிடைத்த சொத்துக்கள் என விளம்புகை செய்ய தனியாக பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைப்பதற்கு

உரிமை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் மோசடியாக எங்களால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் ராம்கோ சிமிண்ட், துலுக்கப்பட்டியில் வேலை பார்த்தார். பணி ஓய்வு பெற்ற பின்பு எனது தகப்பனார் இறந்துவிட்டார். நான் மேற்படி நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் வேலை பார்க்கிறேன்.

5) வாரிசு அடிப்படையில் எனக்கு மேற்படி வேலை கிடைக்கவில்லை. வாதி கோரிய பரிகாரம் மற்றும், 5ம் பிரதிவாதி எதிர்கோரிக்கையில் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தவறான எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் எனக்கு கிடைக்கப்பெற்று எங்கள் இருவரின் தனித்த அனுபவத்தில் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.